மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை
அ.வ.எண். 21/25

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: அன்னபாக்கியம் தேதி : 17.02.26
வயது : க/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>17.02.26 குறுக்கு விசாரணை</u>

1.எனக்கு வரவேண்டிய இடத்துக்காக வழக்கு போட்டுள்ளேன். யாரிடம் இருந்து இடம் வரவேண்டும் என்றால் என் அண்ணன் முருகேசனிடம் இருந்து வரவேண்டும். அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்றால் என் அப்பா வெள்ளத்துரை நாடார் பெயரில் உள்ளது. என் அப்பா பெயரில் எவ்வளவு இடம் இருந்தது என்றால் 44 செண்ட் ஆகும். அதன் சர்வே எண் ஞாபகம் இல்லை. என் அப்பாவுக்கு மொத்தம் 4 பேர் வாரிசுகள். அவர்கள் முருகேசன், ராமச்சந்திரன், பூமணி மற்றும் நான் ஆவோம்.

2.நான் ஏரல் பத்திர அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் ஆம். எந்த தேதியில் என்றால் 20.09.2024 ம் தேதி ஆகும். எதற்கு சென்றேன் என்றால் என் அண்ணன் முருகேசன் 11 செண்ட் இடம் தருவதாக அழைத்தார். அங்கு என்னிடம் நிறைய தாள்களில் கையொப்பம் வாங்கினார். நான் 6 ம் வகுப்பு வரை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:16:23 +0530

படித்துள்ளேன். நான் தமிழில் கையொப்பம் செய்வேனா என்றால் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன்.

3.என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 2 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது என்றால் ஆம். அதில் வேறு யார் யார் கையொப்பம் உள்ளது என்றால் பட்டுக்கனி, செல்வசுந்தரி, பாலசுப்பிரமணியன், ஜெயலெட்சுமி, ஜெயமாரி, பட்டுராசா, முருகேசன், அன்னபாக்கியம், ராமச்சந்திரன், பூமணி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். ஜெயலெட்சுமி என்பவர் பெயர் எஸ்தர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து கையொப்பங்களும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் பட்டுக்கனி என்பவரின் கையொப்பம் மட்டும் தமிழில் உள்ளது.

4.பத்திரத்தை பதிவு செய்த சார்பதிவாளர் முன்பு தான் நாங்கள் அனைவரும் வா.சா.ஆ 2ல் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 2ல் எங்களது அனைவரது புகைப்படம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஐ படித்து பார்த்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் நான் அந்த நேரத்தில் சரியாக படிக்கவில்லை. வா.சா.ஆ 2ல் எங்கள் வகையறாவினருக்கு 44.5 செண்டும், எங்கள் பெரியப்பா வகையறாவினருக்கு 44.5 செண்டும் என்று குறிப்பிட்டு எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான்.

5.எங்கள் பெரியப்பா வகையறாவினருக்கு வா.சா.ஆ 2ல் கண்ட 1ம் தபசில் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2ல் கண்ட 2ம் தபசில் சொத்து எங்கள் வகையறாவினருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.17 10:16:28 +0530

வா.சா.ஆ 2ன் படி எனக்கும், எனது சகோதர சகோதரிகளுக்கும் தலா 11 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான். 20.09.2024ல் நானும், 3ம் பிரதிவாதியும் எங்களுக்குரிய தலா 11 செண்ட் சொத்தினை பொறுத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு செட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

6.வா.சா.ஆ 2ல் உள்ள அன்னபாக்கியம் என்ற கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 3ம் பிரதிவாதி மற்றும் எனது கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 செட்டில் மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் முன்னிலையில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னுடன் சேர்ந்து கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணம் எதற்காக பதிவு செய்யப்படுகிறது என்ற விபரத்தை சார்பதிவாளர் சொன்னார் என்றால் சரிதான்.

7.வா.சா.ஆ 3 ஆவணத்தினை நானும், 3ம் பிரதிவாதியும் எங்களுக்குரிய பாகங்களை எழுதி கொடுப்பதாக மனப்பூர்வமாக ஒப்புகொண்டு கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் மனப்பூர்வமாக கையெழுத்து செய்து கொடுத்துவிட்டு தற்போது தாவா சொத்தின் விலை அதிகரித்து விட்டதால் அதனை மறுத்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா வசதியானவர் என்றால் சரிதான். அவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:16:32 +0530

8.தாவா கிராமத்தில் என் அப்பா பெயரில் இன்னும் பிரிவினை ஆகாத சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அதில் அவரது வாரிசுகளான எங்களுக்கு தலா 4ல் ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான். மேட்டுப்பாளையத்திலும் என் அப்பா பெயரில் பாகம் ஆகாத சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்து மட்டும் தான் பாகபிரிவினை செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். பாகம் ஆகாத சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். பாகம் செய்யும் போது எனக்கு பாகத்தை தருவார்கள் என்றால் ஆம்.

9.என் அப்பா உயிருடன் இருக்கும் போது 1, 2 பிரதிவாதிகள் தான் அவரை பராமரித்தார்கள் என்றால் எல்லோரும் தான் பார்த்தோம். என் அப்பாவுக்கு கண் தெரியாது என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் ஒற்றுமையாக தான் இருந்தோம் என்றால் சரிதான். மேட்டுப்பாளயத்தில் எனக்கு கடை வைத்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் என் மகள் திருமணத்திற்கு உதவி செய்துள்ளனர் என்றால் பதிலுக்கு நானும் உதவி செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகளுக்கு மனப்பூர்வமாக செட்டில் மெண்ட் செய்து கொடுத்து விட்டு எனது பெரியப்பா மக்களின் பேச்சை கேட்டுக்கொண்டு வீண் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

10.வா.சா.ஆ 3ல் ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்ய உரிமை கிடையாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் படித்து காண்பிக்கவில்லை. 2ம் பிரதிவாதி வா.சா.ஆ 3 ஐ ஆட்சேபித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:16:36 +0530

வேண்டாம் என்று இருந்துவிட்டார். வா.சா.ஆ 3 மோசடியாக எழுதி பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். சார்பதிவாளரிடம் வா.சா.ஆ 3 நிறைவேற்றப்பட்டது சம்பந்தமாக உடனடியாக எதுவும் ஆட்சேபனை செய்தேனா என்றால் அவசரமாக கையொப்பம் செய்துவிட்டேன். படித்து பார்க்கவில்லை. காவல் துறையிடம் புகார் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11.நான் சொல்வது போல் 1, 2 பிரதிவாதிகளும் மோசடியாக எந்த ஆவணமும் எழுதி பெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.17 10:16:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.